ஏக இறைவனின் திருப்பெயரால்

# யார் இவர்?

உலகில் வாழும் நான்கில் ஒருவர் இவரை தன்னுடைய உயிரினும் மேலானவராக கருதுகின்றனர். அவர் வாழ்ந்து காட்டிய அடிப்படையில் தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள விரும்புகின்றனர் ஏன்?

**இக்கேள்விக்கான சுருக்கமான பதில் தான் இந்த சிற்றேடு**

## நேர்மை

இவர் ஒரு உண்மையாளர், நேர்மையாளர் என இவரின் எதிரிகளே சான்று பகிர்ந்தனர். அரசு கருவூலத்தில் இருந்த ஒரு துண்டு பேரித்தம் பழத்தை தனது மழலை பேரன் வாயில் போட வாயில் இருந்த பேரித்தம் பழத்தை துப்ப வைத்து சிறு பேரித்தம் பழமாக இருந்தாலும் தன் குடும்பாத்தாருக்கு அதில் உரிமையில்லை என்ற ஆட்சியாளர். மதினா நகரில் இறைவனை வணங்க இறையில்லம் அமைக்க அநாதை சிறுவர்கள் இலவசமாக இடம் கொடுக்க முன் வந்தும், அதனை நிராகரித்து அதற்கான முழு பணத்தை கொடுத்து வாங்கிய இறைத்தூதர்.

## எளிமை

மாமன்னர்கள் உண்ட உயர்தரமான உணவுகளை தன் கண்களால் கூட கண்டிராத அரசர், சராசரி மனிதன் உண்ணுகின்ற உணவைக் கூட உண்டிராத உத்தம தூதர், இவர் வீட்டில் பல மாதங்கள் அடுப்புப் பற்ற வைக்கப்படாமலே கழிந்திருக்கிறது. அவர் அணிந்திருந்த ஆடைகள், இன்றைக்குப் பரம ஏழை கூட அணிய வெறுக்கும் ஆடையாகத்தான் இருந்தன போர்த்திக் கொள்ள ஒரு போர்வை, அணிந்து கொள்ள ஒரு முரட்டு வேட்டி இவ்விரண்டையும் தவிர வேறேதையும் தன் வசம் வைத்திருக்காத தலைவர்.

**அரசராக இருந்தவரின் அரண்மனை சொத்துகள் என்ன தெரியுமா?**

ஒரே ஒரு பாய் விரிப்பு, அதுதான் பகலில் படுக்கைகான விரிப்பு,
இரவில் வீட்டை மறைக்கும் கதவு

## புகழுக்கு ஆசைப்படாத மாமனிதர்

மக்களிடத்தில் எவ்வித மரியாதையையும், தனிப்பட்ட கவனிப்பும், சிறப்பும் பெற அவர்கள் ஒரு போதும் விரும்பியதில்லை. மிகப்பெரிய சாம்ராஜ்யத்தின் ஆட்சியாளரான இறைத்தூதரை காண்பதும், கேள்வி கேட்பதும், பேசுவதும், பழகுவதும், ஒன்றாக உணவு அருந்துவதும், பொது மக்களுக்கு சிரமமானதாக இருந்ததில்லை,

**தான் இறைவனின் அடிமையும் இறைத்தூதருமாவேன் என கூறி**
**தன்னை வரம்பு மீறி புகழாதீர்கள் என எச்சரித்த மாமனிதர்.**

ஏகத்துவ முஸ்லிம் ஜமாஅத்

YMJ +91-94432-02982 www.fb.com/onlineYMJ www.onlineymj.com onlineymj@gmail.com

## தன்னை கொலை செய்ய முற்பட்டவரையும் மன்னித்த மாண்பாளர், அவர் செய்த போதனை?

இறந்துபோன மனிதர்கள், அவர்களின் சமாதிகள், உருவச்சிலைகள், கற்கள், மரங்கள், மனிதர்கள் இவைகள் வணங்க தகுதியற்றவை, வணக்கத்திற்கு தகுதியானவன் இவ்வுலகைப் படைத்து பரிபாலிப்பவனாகிய ஒரே இறைவன் மட்டுமே, அவனால்லாத எவரும் வணங்கத தகுதியற்றவர்கள் என்று உலகிற்கு உரைத்தார், எந்த இடைத் தரகர்களும் இன்றி இறைவனை நேரடியாக வணங்கவேண்டும் என்பதே இவரின் அடிப்படை போதனையாக இருந்தது.

மனிதர்கள் அனைவரும் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணிலிருந்து உருவாகிப் பல்கிப் பெருகியாவர்களே. அனைவருமே சகோதர சகோதரிகளே, இனம், மதம், மொழி, குலம், ஜாதி போன்றவற்றின் அடிப்படையில் எந்த ஏற்றத்தாழ்வுகளும் கற்பிக்கக் கூடாது. இறையச்சத்தால் மட்டுமே ஒருவர் உயர முடியும் என்கிறது இஸ்லாம்.

இப்போது நீங்களே புரிந்து கொள்ளலாம். இஸ்லாமிய கொள்கை ஏன் எதிர்ப்புகளைச் சந்திக்கிறது என்றும், ஏன் இந்த மாமனிதரை இவர்கள் அவதுாறுகளை கூறி கடுமையாக விமர்சிக்கிறார்கள் என்றும்!

எளிமையான வாழ்க்கை! ஏழ்மையில் பரம திருப்தி!
அநியாயத்திற்கு அஞ்சாத துணிவு! எதையும் சந்திக்கும் வீரம்!
பிறப்பால், மொழியால், இனத்தால் உயர்வு தாழ்வு
கற்பிக்காமல் அனைவரையும் சமமாக மதித்தல்!
ஆட்சியாளராக இருந்தும் அவர்கள் காட்டிய அடக்கம்! எதிரிகளுக்கும் சமநீதி!
பணிவு! எல்லையற்ற பொறுமை! மென்மையான குணம்!
உழைத்து உண்ணுதல்! அசைக்க முடியாத கொள்கை உறுதி!
தாம் சொன்ன அனைத்து சொற்களுக்கும் முதலில் செயல் வடிவம் கொடுத்து
வாழ்ந்து காட்டியது, எதிரிகள் உள்ளிட்ட அனைவரையும் மன்னித்தல்!
பிற சமுதாய மக்களிடமும் நல்லிணக்கத்துடன் நடத்தல்!
தமக்கோ தமது குடும்பத்திற்கோ எந்தச் சொத்தையும் சேர்த்துச் செல்லாதது!
தமது உடமைகள் அனைத்தையும் அரசு கருவூலத்தில் சேர்த்தது!
மனைவியரிடத்தில் சம உரிமை வழங்குதல்!
சிறுவர்களிடம் அன்பு காட்டுதல்! பசித்தோருக்கு உணவளித்தல்!
அநாதைகள் மற்றும் அபலைகளுக்கு ஆதரவளித்தல்!
என அனைத்துப் பண்புகளிலும் சிறந்து விளங்கினார்கள்.

இதன் காரணமாகவே இவரை முஸ்லிம்கள் தமது உயிரை விடவும் அதிகமாக நேசிக்கிறார்கள்.
உலகம் அவர்களை மாமனிதர் என்று புகழ்ந்து போற்றுகிறது.
அவர்தான் உலகத்திற்கு நல்வழி காட்டிய இறைத்தூதர்
**முஹம்மது நபி(ஸல்)** அவர்கள்

இம்மாமனிதரை பற்றி மேலும் அறிய **ஏகத்துவ முஸ்லிம் ஜமாஅத்**

YMJ +91-94432-02982 www.fb.com/onlineYMJ www.onlineymj.com onlineymj@gmail.com